**13.11.2025.**

**MCOP.No.78/2012**
**ம.சா.1 : தங்கவேல்**
**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் ஈச்சர் பார்சல் வண்டியை ஓட்டி கொண்டு வந்தேன் என்றால் சரிதான். நான் வண்டியை ஓட்டிக்கொண்டு செல்லும் போது தீடிரென்று பிரேக் போட்டேன் முன்னால் வரிசையாக வாகனம் சென்று கொண்டு இருந்தது. பிரேக் போட்ட உடன் பின்னால் வந்த அரசு போக்குவரத்து கழக பேருந்து இடித்து விட்டது என்று சொன்னால் நான் மயக்க நிலை அடைந்துவிட்டேன். நான் கடந்த 10 வருடமாக இந்த வழக்கை நடத்தாமல் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாமல் இருந்ததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மீண்டும் கோப்புக்கு எடுக்க நான் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. நான் வாகனம் ஓட்டி செல்லும் போது ஏகேடி பேருந்து எதிரே வந்ததால் நான் உடனடியாக பிரேக் போட்டேன். ஏகேடி பேருந்து நேராக வந்து நான் ஓட்டி வந்த ஈச்சர் வாகனத்தன் மீது  எதிரே மோதி விட்டது.

2) அரசு பேருந்து என் வாகனத்தின் பின்னால் இடித்தது என்று சொன்னால் முதலில் வந்த வாகனம் இடித்து விட்டதால் நான் உடனே மயக்கமாகிவிட்டதால் எந்த பேருந்து இடித்தது என்று தெரியவில்லை. நான் வாங்கிய சம்பளம் 15000க்கு ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பணமாக தான் சம்பளம் கொடுத்தார்கள். நான் மருத்துவ 50000/- செய்ததற்கான பில்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வீடு எரிந்துவிட்டதால் ஆவணங்கள் இல்லை. வீடு எப்போது எரிந்தது என்றால் சுமார் 9-10 வருடம் இருக்கும். வீடு எரிந்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. மேற்படி விபத்து ஏற்பட்ட காயத்திற்கு நான் எவ்வித மருத்துவ செலவு செய்யவில்லை என்றும் விபத்தில் நஷ்ட ஈடு கோருவதற்காக வீடு எரிந்தபோது  அவை எரிந்து விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு அடிபட்டதால் புகார் கொடுக்க செல்லவில்லை.

நான் பல்வேறு தலைப்புகளில் கோரி உள்ள இழப்பீடு மிக அதிகமானது என்றும் மனுவிற்காக மிகைப்படுத்தி கோரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் விபத்தில் ஈடுபட்டதாக சொல்லும் அரசு பேருந்தை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.13 17:42:47 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**